செ.வெ.எண்:377/2009(செமதொஅ) நாள். 05.11.2009

# செம்மஞ்சேரி, கண்ணகி நகர், ஒக்கியம்துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் தீர்க்க மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் நடவடிக்கை மேறகொண்டார்.

காஞ்சிபுரம் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் 30.10.2009 அன்று கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு குழுக்கூட்டம் கூட்டத்தலைவர் திரு.டி.ஆர்.பாலு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. குழுக்கூட்டத்தில் செம்மஞ்சேரி, ஒக்கியம்துரைப்பாக்கத்தில் உள்ள கண்ணகி நகர் ஆகிய பகுதிகளில் நீண்ட நாட்களாக குடிநீர் பிரச்சனை உள்ளதாகவும், அதனைத் தீர்க்க வேண்டும் என சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையினை ஏற்று, அந்த பகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வுச் செய்து, குடிநீர் பிரச்சனை தீர்க்க வேண்டும் என குழுத் தலைவர் கூறினார்.

அதன் அடிப்படையில் புனிததோமையர் ஊராட்சி ஒன்றியம், செம்மஞ்சேரி ஊராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு நேரடியாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா, புனித தோமையர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.க.ஏழுமலை, மரபுசாரா எரிசக்தி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.த.விஸ்வநாதன், வருவாய் கோட்ட அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம், சிட்லப்பாக்கம் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் திரு.மு.மனோகரன், செம்மஞ்சேரி ஊராட்சி மன்றத் தலைவர் திரு.தனசேகரன், தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர், பெருநகர குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தார்கள்.

செம்மஞ்சேரியில் சுனாமியில் பாதிக்கப்பட்ட 2000 குடும்பங்களுக்கு தினந்தோறும் 20 லாரிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் மூலம் 6 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது பற்றாக்குறையாக உள்ளது என பொதுமக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் தினந்தோறும் தற்போது வழங்கும் 20 லாரிகள் குடிநீருடன் கூடுதலாக மேலும் 20 லாரி தண்ணீரை செம்மஞ்சேரி ஊராட்சிக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். லாரிகளை ஊராட்சி ஏற்பாடு செய்யும். இனிமேல் குடிநீர் பிரச்சனை இப்பகுதியில் இருக்கவே கூடாது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் சரியான முறையில் செயல்படுகிறதா என்பதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கண்காணிக்க வேண்டும்.

சுனாமி குடியிருப்பு பகுதியில் தற்போது 600 குடும்பங்கள் மட்டும் முறைப்படி மின்சாரம் இணைப்பு பெற்றுள்ளார்கள். மீதமுள்ள 1400 குடும்பங்கள் மின்சாரத்தை பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் அவர்கள் மீட்டர் பொருத்தவில்லை. அதற்கு வேண்டிய தடையில்லா சான்றிதழ்களை தமிழ்நர்டு குடியிருப்பு மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஒருவார காலத்திற்குள் குடியிருப்போருக்கு தர வேண்டும். குடியிருப்போர் ஒவ்வொருவரும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தலா ரூ.1950 கட்டணம் செலுத்தி தங்கள் வீடுகளில் மீட்டர் பொறுத்தி கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாத குடும்பங்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்பதை அமைச்சர் தெரிவித்தார். மின் கட்டணம் செலுத்தியவர்களுக்கு ஒருவார காலத்திற்குள் மீட்டர் பொருத்தித் தர வேண்டும் என்று மின்சாரத்துறை செயற்பொறியாளரை கேட்டுக்கொண்டார். அதன்படி அவரும் ஒப்புக்கொண்டார். ஒக்கியம்துரைப்பாக்கம், கண்ணகி நகரில் மழை காலத்தில் தண்ணீர் தேங்கி விடுகிறது. மழை நீரை வெளியேற்ற உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வட்டாரவளர்ச்சி அலுவலர் பொதுப் பணித்துறை செயற்பொறியாளரை கேட்டுக் கொண்டார். இதுபோன்ற ஆய்வு கூட்டம் விரைவில் நடத்தப்படும். அதற்குள் இந்த திட்டப்பணிகள் நிறைவேற்றியது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் பேசும்போது, இங்கு பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்துள்ளார்கள். அந்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஒக்கியம் துரைப்பாக்கம், செம்மஞ்சேரி, கண்ணகி நகர் போன்ற பகுதிகளுக்கு மாநகர குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் சிறப்பு அனுமதி பெற்று குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்